1987 மே 6]

கடந்த 2 மாதத்திற்கு முன்பும் பார்த்தேன். அப்படியே இருக்கிறது. எப்போது இந்தக் கடிதம் எழுதப்பட்டது, அதிலே ஏற்படுகின்ற காலதாமதத்தைத் தவிர்த்து உடனடியாக அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்பதைப் பற்றி அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த கட்டடத்திலே உள்ள அபாயத்தைக் குறித்து விரைவில் மதுரை இளநிலைப் பொறியாளரிடம் மதிப்பீடு பெற்று கட்டுமானப் பணியினை தொடங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

தாம்பரம் தொகுதி, மாடம்பாக்கம் ஊராட்சி அருள்மிகு தேனபுரீஸ்வரர் ஆலயம்.

623—(*வினா எண். 9238) திரு. எல்ல. இராசமாணிக்கம்: மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாம்பரம் சட்டமன்ற தொகுதியில், மாடம்பாக்கம் ஊராட்சியில் உள்ள அருள்மிகு தேனபுரீஸ்வரர் ஆலயத்தில் உள்ள விக்கிரகங்கள் அண்மையில் களவாடப்பட்டுள்ளது உண்மையா?

(ஆ) ஆம் எனில், விவரமென்ன?

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. எல்ல. இராசமாணிக்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாடம்பாக்கம் அருள்மிகு தேனபுரீஸ்வரர் திருக்கோயில் பழமை வாய்ந்தது, தொன்மை வாய்ந்தது. அந்தக் கோயிலிலுள்ள சிலைகள் திருடப்பட்டதாக ஒரு பகுதியினரும், திருடப்படவில்லை என இன்னொரு பகுதியினரும் பிரச்சினையை உண்டுபண்ணி, இரண்டு வழக்குகள் இன்றைய தினம் அதுபற்றி நீதிமன்றத்தில் நடைபெறுகின்ற நிலையில் ஊர் அமைதி கெட்டிருக்கும் நிலையில், சிலை திருட்டு நடக்கவில்லை என்று மாண்புமிகு அமைச்சர் இங்கே அறிவித்ததற்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். அதே நேரத்தில் அந்தக் கோயிலுக்கு பல ஏக்கர் நிலங்கள் இருப்பதாக அறிகிறேன். அந்தக் கோயிலுக்குச் சொந்தமாக எவ்வளவு ஏக்கர் நிலம் இருக்கிறது என்பதையும், அவை யார் யாரிடம் இருக்கிறது என்பதையும் அறிய விரும்புவதோடு. அற நிலையத் துறையின் மூலமாக தமிழகம் முழுமையும் இருக்கின்ற கோயில்களைப் பொறுத்தவரையிலும் கூட அதுபற்றிய விவரங்களைக் கண்டறிந்து அந்தந்த கோயில்

[1987 மே 6

களிலேயே அறிவிப்பு பலகை மூலம் பொது மக்களுக்கு அறிவிப்பு செய்ய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை மேற்கொள்வார்களா ?

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 23–12–1978 அன்று ஆணையாளர் சமர்ப்பித்த அறிக்கையின்படி ஏற்கனவே அங்கே 21 சிலைகள் இருந்தது. அப்படியே இருப்பதாக தகவல் கொடுக்கப்பட்டிருக்கிறது. தற்போதுள்ள அறங்காவலர் திரு. பஞ்சாட்சரம் என்பவர் 1–10–1983 அன்று திரு. ஜி. ஆதிகேசவலு என்கிற அறங்காவலரிடமிருந்து முழு பொறுப்பையும் ஏற்றுகொண்டார். அவர் பொறுப்பேற்ற பிறகு ஏற்கனவே சிலைக்ள் இருந்தாகவும், அவை களவு போய் விட்டதாகவும் தனியாக வழக்கு தொடுத்திருக்கிறார். அந்த வழக்கு தவிர சட்டப்படி ஏற்கனவே இருந்த 26 சிலைகளும் இருந்துகொண்டிருக்கின்றன. அந்தக் கோயிலுக்குச் சொந்தமான 84.32 ஏக்கர் நிலம் இருக்கிறது. ஆண்டு வருமானம் 34 ஆயிரம் ரூபாய் ஆகும்.

திரு. மெ. ஆண்டி அம்பலம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை அழகர்கோயில் உட்பட பல்வேறு கோயில் ஊழியர்கள் தங்கள் ஊதியம் பற்றி அரசுக்கு முறையீடு செய்திருக்கிறார்கள். அவர்களுடைய கோரிக்கை நிறைவேற்றப்படாததால் இன்றைய தினம் அவர்கள் உண்ணாவிரதம், ஆர்ப்பாட்டம் என்று ஆரம்பித்திருக்கிறார்கள். எம்.எல்.ஏ.–க்களிடமும் அவர்களுடைய ஊதியம் பற்றி முறையிட்டிருக்கிறார்கள். அதுபற்றி அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது?

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே இந்த அவையில் இதுபற்றி விளக்கமாக பதிலளித்திருக்கிறேன். மூலக் கேள்விக்கும் இதற்கும் சம்பந்தமில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. வை. பாலச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாடம்பாக்கம் அருள்மிகு தேனுபுரீஸ்வரர் ஆலயத்திலுள்ள விக்கிரகங்கள் திருடப்பட்டன என்று ஒரு சாராரும், திருடப்படவில்லை என்று இன்னொரு சாராரும், சொல்கிற நிலையில், திருட்டு நடைபெறவில்லை என்று ஆணையாளர் அறிக்கை தந்த பிறகு, அங்கேயுள்ள ஓர் அறங்காவலர் நீதிமன்றத்திற்குச் சென்றிருக்கிறார் என்றால், முறையாக அவர் அனுமதி பெற்று தான் நீதிமன்றத்திற்கு சென்றாரா அல்லது அவராகவே சென்றாரா என்று அறிய விரும்புகிறேன். மேலும் அவராக சென்றிருக்கிறார் என்றால் அவர் மீது அரசு மேற்கொண்ட நடவடிக்கை என்ன என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபற்றி பிற்பாடு அவைக்கு தகவல் அறிவிக்கிறேன்.